# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 60 — 1973 මැයි 18 වැනි සිකුරාදා — 1973.05.18**

60 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு மே மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படுவதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 345 |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்கள் .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | 347 |
| ஏற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 349 |

| | பக்கம் |
|---|---|
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 354 |
| மாணுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

**1973 இன் இல. 258**

டி. 250/ஆர்.ஈ.சி.ரி./5

**தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றம்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர் 1973, மே 14 ஆம் திகதிமுதல் கேனல் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கேணல் டி. பீ. பெரேரா, சி. எஸ். ஆர்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு மே மீ 07 ந உ.

5–550/1—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

**1973 இன் இல. 259**

எண் : டி. 250/ஆர்ஈசிரி/5

**தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, மே மாதம் 14 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :—

கேணல் டி. பீ. பெரேரா,

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு மே மீ 07 ந உ.

5–550/2–18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு மே மீ 5 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

1973 இன் இல. 260

எண் : டி/வி. எஃவ்/30/(11)

**தரைப்படை—இலங்கை தொண்டர் படை—அதி உத்தமராம் சனுதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனந் துறத்தல்கள், இளைப்பாறல், பதவியேற்றங்கள், நியமனங்கள் ஆதியன**

**(அ) நியமனந் துறத்தல்கள்**

(I) கேணல் றெஜினோல்ட் லயனெல் முனசிங்ஹ, ஈ. டி. 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கைத் தொண்டர் படையின் பரிசோதகர் நியமனத்தைத் துறக்கிருர்.

(II) லெஃவ்ரினன்ற் கேணல் அலன் ரெலென்ஸ் நுகவெல, சி. எஸ். ஆர்., 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கைச் சிங்கப் பேரணியின் 2 ஆம் (தொண்டர்) பட்டாளத்தின் கொமாண்டிங் ஒபிசர் நியமனத்தைத் துறக்கிருர்.

**(ஆ) இளைப்பாறல்**

கேணல் றெஜினோல்ட் லயனெல் முனசிங்ஹ, ஈ. டி., 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கைத் தொண்டர் படையிலிருந்து இளைப்பாறினுர்.

**(இ) பதவியேற்றங்கள்**

(I) 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் கேணல் ஆகக் கடவர் :—
லெஃவ்ரினன்ற்-கேணல் அலன் ரெலென்ஸ் நுகவெல, சி. எஸ். ஆர்.

(II) 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் லெஃவ்ரினன்ற்-கேணல் ஆகக் கடவர் :—

மேஜர் சந்திரா நிஸ்ஸங்க பாணபொக்கே, சி. எஸ். ஆர்.

**(ஈ) நியமனங்கள்**

(I) கேணல் அலன் ரெலென்ஸ் நுகவெல, 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கைத் தொண்டர் படையின் பரிசோதகர் ஆக நியமிக்கப்படுகிருர்.

(II) லெஃவ்ரினன்ற்-கேணல் சந்திரா நிஸ்ஸங்க பாணபொக்கே, சி. எஸ். ஆர். 1973, மே 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கை சிங்கப் பேரணியின் 2 ஆம் (தொண்டர்) பட்டாளத்தின் கொமாண்டிங் ஒபிசராக நியமிக்கப்பெறுகிருர்.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்க,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 24 ந உ.

5–476—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 261

எண் : டி./வி. எஃவ்/17 எ (vii)

**தரைப்படை—எஸ். எல். வி. எஃப்—அதி உத்தமராம் சனுதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனந் துறத்தல், மாற்றல், பதவியேற்றம், நியமனம் ஆதியன**

**(அ) நியமனந் துறத்தல்**

பிறெவே கேணல் ஜோர்ஜ் உவில்ஃபிறெட் ராஜபக்ஸ, ஈ. டி, 1973, மே மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கை கடெற் கோ–இன் றெஜிமென்ரல் கொமாண்டர் நியமனத்தைத் துறக்கிருர்.

**(ஆ) மாற்றல்**

பிறெவே கேணல் ஜோர்ஜ் உவில்ஃபிறெட் ராஜபக்ச, ஈ. டி., 1973, மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கைப் பயிலுநர் சிறப்பணியின் ஒதுக்குப் படைக்கு மாற்றப்படுகிருர்.

**(இ) பதவியேற்றம்**

1973, மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து லெஃவ்ரினன்ற்-கேணல் ஆகக் கடவர் :—

பிறெவே லெஃவ்ரினன்ற்-கேணல் கருணுவல்லப பதிர கிரிதரகே நிலமே, ஈ. டி., சி. சி. சி.

**(ஈ) நியமனம்**

லெஃவ்ரினன்ற்-கேணல் கருணுவல்லப பதிர கிரிதரகே நிலமே, ஈ. டி., சி. சி. சி., 1973, மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கைப் பயிலுநர் சிறப்பணியின் றெஜிமென்ரல் கொமாண்டர் ஆக நியமிக்கப்பெறுகிருர்.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 24 ந உ.

5–459—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 262

டி./வி. எஃவ்/9/எ.

**தரைப்படை—இலங்கை தொண்டர் படை—அதி உத்தமராம் சனுதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றங்கள்**

(அ) 1972, திசெம்பர் 1 ஆம் திகதிமுதல் மேஜர் ஆகக் கடவர் :
கப்ரின் கெனெத் லெஸ்லி அபேவிக்ரம, சி. எ. எஸ். சி.

(ஆ) 1972, திசெம்பர் 1 ஆம் திகதிமுதல் தற்காலிக மேஜர் ஆகக் கடவர் :—

கப்ரின் அபறைக்ககமகே விமலதாச, சி. எ. எஸ். சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

வி.ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 24 ந உ.

5–458—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 263

டி. 250/ஆர்.ஈ.சி.ரி./3 (iii)

**தரைப்படை—இலங்கை தொண்டர் படை—அதி உத்தமராம் சனுதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற மாற்றல்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர், 1973, பெப்புருவரி 1 ஆம் திகதியிலிருந்து, லெஃவ்ரினன்ற் (தற்காலிக கப்ரின்) வீபத்தே முதியன் சேலாகே விஜேதாச வணிகசிங்ஹ, சி. என். ஜி., உக்கு நேரடுத்துப் பின்னர் முதுமுறை வகிக்கும்வண்ணம், இலங்கைத் தேசிய காவற் படையின் 2 ஆம் பட்டாளத்துக்கு மாற்றப்படுகிருர்.

லெஃரினன்ற் அருமகங்காணி எட்வர்ட் அமரதாச த சில்வா, சி.சி.சி'

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

வி.ரீ. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 03 ந உ.

5–417—18.05.73 ந். திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 264

டி 42/ஆர்.ஈ. சி. ரி. வொல்யூம் iv

**இலங்கைக் கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள்**

அதி உத்தமராம் சனுதிபதி அவர்கள் இலங்கைக் கடற்படையில் பின்வரும் நியமனங்களை அங்கீகரித்தலிற் களிகூர்ந்துள்ளார் :

**1973, யூன் 1 ஆம் திகதி தொடக்கம் (திருகோணமலை) கடற்படைப் பொறுப்பலுவலரும், அத்துடன் சட்டவிரோதக் குடிவரவுத் தடுப்புப் பணிப்படை (கிழக்கு)-இன் இயைபுபடுத்தும் அலுவலரும் ஆகக் கடவர் :**

கொமாண்டர் (சி) எ. எச். எ. த சில்வா, இலங். க.ப.

1973, யூன் 1 ஆம் திகதி தொடக்கம் இலங்.தே.சே. கஜபாஹு இன் கொமாண்டிங் ஒபிசர் ஆகக் கடவர் :

கொமாண்டர் (சி) கெ. என். ஜில்லா, இலங்.க.ப.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 25 ந உ.

5–416—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல 60

1973 இன் இல. 265

எண். டி. 251/ஆர்.ஈ.சி.ரி./3

**இலங்கைக் கடற்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றங்கள்**

1973, சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஆகக் கடவர் :—

லெஃவ்ரினன்ற் சி. பி. எச். குணரத்ன, இலங். க. ப.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, ஏப்பிரல் 25 ஆம் திகதி.

5–342—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 266

எண். : டி. 251/ஆர். ஈ. சி. ரி./3

**இலங்கைக் கடற்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றங்கள்**

1973, சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஆகக் கடவர் :—

லெஃவ்ரினன்ற் ஏ. ஐ. ஜயவர்த்தன, இலங். க.ப.

1973, மாச்சு 15 ஆம் திகதி தொடக்கம் லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஆகக் கடவர் :—

லெஃவ்ரினன்ற் ஏ. எம். ஏ. பி. அபயவர்த்தன, இலங்.க.ப.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆு ஏப்பிரல் மீ 25 ந வ.

5–549—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973இன் இல. 267

எண் : டி. 22/ஆர். ஈ. சி. ரி./234.

**இலங்கைக் கடற்படை — அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, ஓகத்து 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கைக் கடற்படையின் நிரந்தர கடற்படையிலிருந்து இளைப்பாறுகிருர்:—

லெஃவ்ரினன்ற் எம். ஏ. ஜெ. அன்ட்ரீஸ், இலங். க. ப்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, ஏப்பிரல் 25 ஆம் திகதி.

5–341—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

1973 இன் இல. 268

எண் : டி. 252/ஆர்.ஈ.சி.ரி./3.

**இலங்கை வான் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றங்கள்**

1973, ஏப்பிறல் 1 ஆம் திகதி முதல் சப்ஸ்ரான்ரிவ் ஸ்குவாட்றன்—லீடர்கள் ஆகக் கடவர் :—

ஃபிளைற்–லெஃவ்ரினன்ற் இந்திரா ஹேமால் ஜயதிலக்க (01109) தொழிற்பாடுகள்/வான்

ஃபிளைற்–லெஃவ்ரினன்ற் சுனில் லீலநந்த ஏக்கநாயக்க (01111) நிருவாக

1973, ஏப்பிறல் 1 ஆம் திகதி முதல் தற்காலிக ஸ்குவாட்றன்—லீடர்கள் ஆகக் கடவர் :—

ஃபிளைற்–லெஃவ்ரினன்ற் முலாஃவ்வர் முகம்மது காலிட் (01106) உபகரணம்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆு மே மீ 10 ந வ.

5–531—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

# நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 269

**அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளரினுற் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்**

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எஸ். எம். அபூதாஹிர் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1973 ஏப்ரல் 18, 23 விருந்து 28 | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. அதப்பத்து .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, தங்காலை | 1973 ஏப்ரல் 2 .. | திரு. ரி. என். அபேவீர இல்லாத காலம் |
| திரு. ரி. தம்பிரட்ணம் .. .. | யாழ்ப்பாணம் பதில் இணை நீதவான் முதலியன, மல்லாகம் | 1973 ஏப்ரல் 12 விருந்து 23 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. ரி. குணரட்ண .. .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை | 1973 ஏப்ரல் 6, 18, 19 .. | திரு. கே. வி. சுவர்ணதிபதி இல்லாத காலங்கள் |
| திரு. என். ஏ. ருஜரட்ணம் .. | பதில் இணை நீதவான் முதலியன, பருத்தித்துறை | 1973 மார்ச் 29 விருந்து ஏப்ரல் 2 | திரு. எஸ். ஜோகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஞானச்சந்திரன் .. | ஷை .. | 1973 ஏப்ரல் 19 விருந்து 23 | ஷை |
| திரு. எச். டி. உபாலி .. .. | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1973 ஏப்ரல் 11 விருந்து 18 | திரு. பி. பி. ரம்புக்வெல்ல இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகருஜா .. .. | கண்டி பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, மாத்தளை | 1973 ஏப்ரல் 7 .. | திரு. ஜே. சேனாதிருஜா இல்லாத காலம் |
| திரு. என். எஸ். சி. அழகமுத்து .. | நுவரேலிய பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அட்டன் | 1973 ஏப்ரல் 19 .. | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஓ. எல். எம். இஸ்மாயில் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை | 1973 ஏப்ரல் 18, 19, 30 விருந்து மே 2 | திரு. கே. விக்னருஜா இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1973 மே 31 .. | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலம் |
| திரு. எச். ஈ. வீரசூரிய .. .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி | 1973 ஏப்ரல் 28 .. | திரு. ஏ. எஸ். விஜதுங்க இல்லாத காலம் |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை நீதவான் முதலியன, சிலாபம் | 1973 எப்ரல் 14 விருந்து 18, 21 விருந்து 23 | திரு. எல். எச். ஜி. வீரசேகர இல்லாத காலங்கள் |
| திரு. எல். எஸ். வி. பெரேரா .. | பதில் இணை நீதவான் முதலியன, பதுளை | 1973 எப்ரல் 14 விருந்து 17 | திரு. எ. பி. அலுவிகார இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். குலதுங்க .. .. | பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை | 1973 எப்ரல் 18 .. | திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. எஸ். எச். அபேசேகர .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பதுளை | 1973 எப்ரல் 18, 19, 21 .. | திரு. பி. ஆர். சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. ரி. வி. கன்னங்கர.. .. | பாணந்துறை பதில் இணை நீதவான் முதலியன, ஹோறணை | 1973 எப்ரல் 12, 18 விருந்து 21 | திரு. டபிள்யு. ஜி. என். வீரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. ரி. எஸ். பி. த. வஸ். குணசேகர .. | பதில் இணை நீதவான் முதலியன, பலப்பிட்டி | 1973 எப்ரல் 9, 10 .. | திரு. ஜே. சி. எ. சி. எம். எஸ். சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. பிரிட்ஸ் கோதகொட .. | பதில் இணை நீதவான் முதவியன, குருணாகல் | 1973 எப்ரல் 14, 18, 21 .. | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். விக்டர் பெரேரா .. | ஷை .. | 1973 எப்ரல் 19 .. | ஷை |
| திரு. பி. மகேஸ்வரன் .. .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1973 எப்ரல் 7 விருந்து 10 | திரு. எம். பி. ஜி. திசனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. பி. எம். எ. டபிள்யு. ஜயவர்த்தன .. | கொழும்பு இணை நீதவான் முதலியன, கொழும்புக் கோட்டை கூட்டு நீதிமன்றம் | 1973 எப்ரல் 2, 26 விருந்து மே 2 | திரு. சி. மனேகரா இல்லாத கர்லங்கள் |
| திரு. ஜே. ஐ. ருஜரட்ணம் .. | பதில் இணை நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் | 1973 மார்ச் 31 .. .. | திரு. கே. பாலகிட்ணர் இல்லாத காலம் |
| திரு. பி. டி. பெர்னுண்டோ .. | பதில் தலைவர், தொழில் முறைமன்று .. | 1973 மே 11 விருந்து 24.. | கொழும்பு தொழில் முறை மன்று (16) ன் 16/876/71, 436/69, 16/890 விருந்து 904, 16/1198/71 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஈ. கணேகொட .. .. | ஷை .. | 1973 மே 9 விருந்து 15 .. | கொழும்பு தொழில்முறை மன்று (14) ன் ஐடிஎல்ரி 14/1 ம், 2 ம், 14/96/70, 37/71, 39/71 விருந்து, 66/71, 68/71 விருந்து, 72/71, 101/71 விருந்து 106/71, 157/71, 209/71, 468/71, 508/71 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. டி. பெர்னுண்டோ .. | ஷை .. | 1973 மே 5 விருந்து 15 .. | கொழும்பு தொழில்முறை மன்று (16) ன் 16/2523/72, 1170/71, 1171/71 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. டி. பெர்னுண்டோ .. | ஷை .. | 1973 மே 7 .. | கொழும்பு தொழில்முறை மன்று (16) ன் 16/928/71, 869/71, 1437/72 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எம். ஜி. எச். த அல்விஸ் .. | ஷை .. | 1973 மே 2 விருந்து 14 .. | கொழும்பு தொழில்முறை மன்றின் 11/33388, 11/1435/70, 429/69, எ/462, எ/464, மாத்தறை தொழில் முறை மன்றின் 11/எம்/962, எம்/963, எம்/1006, எம்/1007, ஐடிஎல்ரி. 11/5, எம்/1318, எம்/1461, எம்/1452, எம்/1465, எம்/1458, எம்/1027, எம்/1444, எம்/1453, எம்/1463, எம்/1455, எம்/1457, காலி தொழில் முறை மன்றின் 11/ஜி/7054, அவிசாவளை தொழில் முறை மன்றின் 11/ஆர்/19737, எ/16, ஆர்/1149, எ/2026, எ/2028, எ/1544, எ/1620, எ/1621 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். ஜி. எச். த அல்விஸ் .. | பதில் தலைவர், தொழில் முறைமன்று .. | 1973 ஏப்ரல் 12 லிருந்து 26 | காலி தொழில்முறை மன்றின் 11/ஜி/7054, மாத்தறைத் தொழில்முறை மன்றின் என/எம்/1315, எம்/898, எம்/1440 லிருந்து 1446, அவிசாவளை தொழில்முறை மன்றின் 11/எ/1663, எ/1285, எ/824, எ/1692/70, கொழும்பு தொழில்முறை மன்றின் 11/258/69 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஈ. கணேகொட .. .. | ஷை .. | 1973 ஏப்ரல் 19 லிருந்து 30 | கொழும்பு தொழில் முறை மன்று (14) ன் 14/534/71, 473/71, 474/71, 409/71, 37/71, 14/293/71, 950/72, 373/71, 328/71 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எ. சீமாம்பிள்ளை .. .. | பதில் இணை நீதவான் முதலியன, மன்னார் | 1973 மே 2 லிருந்து 4 .. | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. எம். எ. சி. த சில்வா .. | சீயன்னக் கோறளை கிழக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத் தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஜூன் 1 லிருந்து 15 தினங்கள் | கெனரட்கொட ஊர் நீதிமன்ற 1769 ஆம் இலக்கக் குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஐ. கேதீஸ்வரன் .. .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 30 .. | திரு. எ. எம். ஐ. சாகிர் இல்லாத காலம் |
| திரு. ரி. யு. காவிற்ற .. .. | தாமன் கடுவ பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 18, 19, 21 .. | திரு. ரி. டபிள்யு. வீரசூரிய இல்லாத காலங்கள் |
| திரு. வி. செல்லையா .. .. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 14, 18, 19,21 | திரு. சி. ஆர். ராஜசிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. பி. பட்ரிக் .. .. | ஏறுவில்—போறைதீவு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | ஷை .. | திரு. கே. சண்முகநாதன் இல்லாத காலங்கள் |
| திரு. யு. எல். எ. மஜீத் .. | பாணமைப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில தலைவர் | 1973 ஏப்ரல் 26, 27 .. | திரு. எஸ். ராஜநாதன் இல்லாத காலங்கள் |
| திரு. எ. சி. ஜாபர் .. .. | ஷை .. | 1973 ஏப்ரல் 30 .. | ஷை |
| திரு. பி. டபிள்யு. அபேசிங்க .. | சீயன்னக் கோறளை மேற்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 9 .. | திரு. டபிள்யு. பி. தசநாயக்க இல்லாத காலம் |
| திரு. ஆர். எம். என். டபிள்யு. ராஜகருணா | ஷை .. | 1973 மார்ச் 31 .. | ஷை |
| திரு. எம். கே. செல்வராஜா .. | கொட்டியார் பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 18, 19, 21 .. | திரு. கே. கணபதிப்பிள்ளை இல்லாத காலங்கள் |
| திரு. எ. ஜே. சாகீத் .. .. | றெய்கம் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 9 லிருந்து 12 | திரு. என். வி. ரி. மெண்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. ஈ. பி. கே. த சொய்சா .. | அளுத்குரு கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 11, 12 .. | திரு. எம். எ. சி. த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. ரணதுங்க .. .. | கல்போடக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 11 .. | திரு. டி. பி. எல்லப்போல இல்லாத காலங்கள் |
| திரு. சி. பி. ரெக்காவ .. .. | குளியாப்பிட்டி முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 24 லிருந்து 27 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. ஐ. எம். வீரரட்ண .. | கடவத்தக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 30 .. | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலம் |

நீதிச் சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச் சபைகள் அலுவலகம்,
த. பெ. 573,
சி/52, கெப்பிட்டிப்பொல வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மே மீ 08 ந் உ.

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

5–415—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்காரபத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், " பம்பலப்பிட்டிய சிறீ சுகதி காமினி சமிதிய மொத்தாராமய கட்டிட நிதி "யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 04 ந் உ.

5–457/1—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

எல். டி.—பி. 7/63

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்காரபத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், "இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பாடசாலைக் கட்டிட நிதி" யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு மே மீ 04 ந வ.

5–457/2—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

எல். டி.—பி. 7/63

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16எ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்ததக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான் "அனுராதபுர மகாவிகாரை அபிவிருத்தி நிதி"யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு மே மீ 04 ந வ.

5–457/3—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**அரசாங்க அறிவித்தல்**

சுகாதார அமைச்சர், வெலிகம பொல்வத்தே கலப்பத்திகே ஆரிய தாச ஆகிய நான் 1964 ஆம் ஆண்டு வியாழக்கிழமை 30 ஆந் தேதி 14,125 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியின் பொது I ஆம் பாகத்தின் (I) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை 1973, ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதற்காக இத்தால் பின்வருமாறு திருத்தி அமைக்கின்றேன் :—

(1) அதன்கண் உள்ள அட்டவணை "அ" வில்,

1.1 யாழ்ப்பாணப் பிரிவு தொடர்பாக

அரசாங்க வைத்தியசாலை நெடுந்தீவு, அரசாங்க வைத்தியசாலை காங்கேசன்துறை, அரசாங்க வைத்தியசாலை ஊர்காவற்றுறை, அரசாங்க வைத்தியசாலை புங்குடுதீவு, கிராம வைத்தியசாலை பளை, கிராம வைத்தியசாலை கோப்பாய், கிராம வைத்தியசாலை வட்டுக்கோட்டை, கிராம வைத்தியசாலை சங்கானை ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும் ;

1.2 கண்டிப் பிரிவு தொடர்பாக

அரசாங்க வைத்தியசாலை அன்கும்பற, அரசாங்க வைத்தியசாலை பொகவந்தலாவ, அரசாங்க வைத்தியசாலை தெல்தொட்ட, அரசாங்க வைத்தியசாலை தொலஸ்பாக அரசாங்க வைத்தியசாலை மடுகொட, அரசாங்க வைத்தியசாலை புசல்லாவ, அரசாங்க வைத்தியசாலை வட்டவளை, அரசாங்க வைத்தியசாலை மாறஸ்ஸன, அரசாங்க வைத்தியசாலை கினிகத்தென்ன, அரசாங்க வைத்தியசாலை மடுல்கெல அரசாங்க வைத்தியசாலை ஹற்றறலியத்த, அரசாங்க வைத்தியசாலை மஸ்கெலியா ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும் ;

1.3 களுத்துறைப் பிரிவு தொடர்பாக

அரசாங்க வைத்தியசாலை இங்கிரிய, அரசாங்க வைத்தியசாலை இறப்பன, அரசாங்க வைத்தியசாலை நாபொட, அரசாங்க வைத்தியசாலை பிம்புற ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும் ;

(2) அதன்கண் உள்ள "ஆ" அட்டவணையில்

2.1 யாழ்ப்பாணப் பிரிவு தொடர்பாக

பூநகரி, காரைநகர், சுன்னாகம், துணுக்காய், அச்சுவேலி, கொடிகாமம், ஆனையிறவு, வட்டக்கச்சி, செம்பியன் பற்று, மண்டதீவு, கைதடி, வரணி, பண்டத்தரிப்பு, நயினாதீவு, கோண்டாவில், அம்பன், வேரவில், கொக்குவில், வன்னிகுளம், அனலைதீவு, வேலணை, முள்ளியன் ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும் ;

2.2 கண்டிப் பிரிவு தொடர்பாக

மினிப்பே, கோணகம, உறுகல, கொதலிகொட, ஹொக்காவெல, வட்டப்பொல, உடுவெல, கலஹா, பமுனுவா, பன்விலத்தென்ன, லக்பொன, பல்லேவத்த, பத்துமுல்ல, மயிலப்பிட்டியா, மெதவல, திட்டபஜ்ஜல, றங்கல ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும் ;

2.3 களுத்துறைப் பிரிவு தொடர்பாக

அளுத்கம, கோனதூவ, பதுறெலிய, மீகஹாதென்ன, கலப்பாத்த, ஹொரேவெல, கெஹெல்வத்த, தொடங்கொட, பண்டாரகம, லத்பந்துற, அழுத்தகம வீதிய, புளத்சிங்கள, வெறகாகொட, ஹல்தோட்ட ஆகிய நிலையங்களை விடுபடச் செய்வதாலும்.

டபிள்யு. பி. ஜி. ஆரியதாச,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு ஏப்பிறில் மீ 27 ந வ.

5–555—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**1954 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்**

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்குறிப்பிட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜே. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

எசீஜியூ/3/351/10.
கொழும்பு,
1973 ம் ஆடு ஏப்ரல் மீ 24 ந வ.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹர பெ. இ. உ. பிரிவு, 203 ம், 204 ம் இலக்கங்களுள்ள (களனி) கிராமசேவகர் பிரிவுக்குள்ளே சின்ஹரமுல்லையில் அமைந்துள்ள கமகேவத்தை என்றழைக்கப்படும் காணிக்குள்ளே 4 பேச்சர்ஸ்கள் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : அதே காணியின் பகுதி ;

கிழக்கு : அதே காணியின் பகுதி ;

தெற்கு : யூ. டபிள்யூ. பெர்னாண்டோவுக்குச் சொந்தமான காணி ;

மேற்கு : லியோ ரோட்.

5–474—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

## இணக்கச் சபைகள் சட்டம்

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், 1971 சனவரி மாதம் 15 ஆம் தேதிய 14,941 ஆம் இலக்கக் கசெற்றறிவித்தல் மூலம் கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்டானைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவராகவிருந்து, அப்பதவியிலிருந்து விலக்கப்பட்ட கட்டானை எத்காலையைச் சேர்ந்த டீ. ஜெரமியஸ் பர்நாந்துபுள்ளே அவர்களுக்குப் பதிலாக கொச்சிக்கடை, தழுவக்கொட்டுவையைச் சேர்ந்த டெனியெல் எதிரிசிங்க அவர்களை அக்குழாத்தின் உறுப்பினராகவிருக்கும் காலத்துள் அக்குழாத்தின் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயகக,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு எப்பிரல் மீ 27 ந் உ.

5–412/1—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

## இணக்கச் சபைகள் சட்டம்

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(3) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் 1971 சனவரி மாதம் 15 ஆம் தேதிய 14,941 ஆம் இலக்கக் கசெற்றறிவித்தல் மூலம் கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்டானைக் கிராமப்பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவராகிய கட்டானை, எத்காலையைச் சேர்ந்த டீ. ஜெரமியஸ் பர்நாந்துபுள்ளே அவர்களை அப்பதவியிலிருந்து நீக்குகின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு எப்பிரல் மீ 27 ஆம் உ.

5–412/2—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

## இணக்கச் சபைகள் சட்டம்

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், 1972 யூன் மாதம் 2 ஆந் தேதிய 10 ஆம் இலக்கக் கசெற்றறிவித்தல் மூலம் வதுளை மாவட்டத்திலுள்ள பம்பரப்பனைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவராகவிருந்து, அப்பதவியிலிருந்து விலகிய பம்பரப்பானை, தியலிந்தையைச் சேர்ந்த எம். ஆர். எம். தர்மசேகர அவர்களுக்குப் பதிலாக பம்பரப்பானை, "ஜயசிறி" ஐச் சேர்ந்த எம். எம். அப்புகாமி அவர்களை அக்குழாத்தின் உறுப்பினராகவிருக்கும் காலத்துள் அக்குழாத்தின் தலைவராகவுமிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இ. விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 10 ந் உ.

5–552—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 மே மாதம் 26 ஆம் தேதிய 9 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 3 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட குருணாகலை மாவட்டத்திலுள்ள குடாகல்பொடைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :

1. குருணாகலை, வெவகெதரை வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏகநாயக்க முதியன்சேலாகே கிரிபண்டா அவர்கள்.
2. குடாகல் கமுவை, மிங்கெட்டியைச் சேர்ந்த திசா பண்டார முதியஞ் சேலாகே றம்பண்டா அவர்கள்.
3. வாரியப்பொலை, ரெகவையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ் சேலாகே முதுபண்டா அவர்கள்.
4. மாஸ்பொத்தை, வேகொல்லையைச் சேர்ந்த ராஜகருணாரத்தின திசாநாயக்க முதியஞ்சேலாகே பியதிஸ்ஸ அவர்கள்.
5. மாஸ்பொத்தை, வெலகனை, "பிறீய சாந்தி" ஐ சேர்ந்த கன்நூரி ஆரச்சிகே திலகரத்தின அவர்கள்.
6. மாஸ்பொத்தை, ரத்கரவ்வையைச் சேர்ந்த தெகிவத்தகே சமரதுங்க அவர்கள்.
7. மாஸ்பொத்தை, சியம்பலங்கமுவையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ்சேலாகே முதுபண்டா அவர்கள்.
8. குடாகல்கமுவை, மாபேகமுவையைச் சேர்ந்த ரிகிரிபண்டா ராமநாயக்க அவர்கள்.
9. குடாகல்கமுவையைச் சேர்ந்த ஏகநாயக்க முதியஞ்சேலாகே டிங்கிரிபண்டா அவர்கள்.
10. குடாகல்கமுவை, மிங்கெட்டியைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ் சேலாகே முதுபண்டா அவர்கள்.
11. வாரியப்பொலை, ரெகவையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ் சேலாகே கழுபண்டா அவர்கள்.
12. மாஸ்பொத்தை, பெல்லந்தெனியா, பத்தளவலத்தையைச் சேர்ந்த பியசேன மானநாயக்க அவர்கள்.
13. மாஸ்பொத்தை, சியம்பலங்கமுவையைச் சேர்ந்த கருணாதிபதி முதியஞ்சேலாகே கழுபண்டா அவர்கள்.
14. குடாகல்கமுவை, மிங்கெட்டி, "அஜந்தா" ஐச் சேர்ந்த கோரத் முதியஞ்சேலாகே ரம்பண்டா அவர்கள்.
15. மாஸ்பொத்தை, பெல்லந்தெனியாவைச் சேர்ந்த ஏகநயக்க முதியஞ்சேலாகே கிரிபண்டா அவர்கள்.
16. வாரியப்பொலை, கலகெதரை, ரெகவையைச் சேர்ந்த கோரத் முதியஞ்சேலாகே விஜேசிங்க அவர்கள்.
17. குருணாகலை, தித்தவெல்லையைச் சேர்ந்த பம்பரெந்த கங்காணங்கே ஜயசேன தர்மதாச பெரேரா அவர்கள்.
18. குருணாகலை, எஸ்வெத்துமை, "ஜெசீம் மன்சில்" ஐச் சேர்ந்த யுனுஸ் லெவ்வை அப்துல் மஜீது அவர்கள்.
19. குருணாகலை, எஸ்வெத்துமையைச் சேர்ந்த உருமலெவ்வை முகம்மது இப்றாகிம் அவர்கள்.
20. மாஸ்பொத்தை, வெலகனையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ் சேலாகே புஞ்சிபண்டார அவர்கள்.
21. குருணாகலை, எஸ்வெத்துமையைச் சேர்ந்த ஜெய்னுல் ஆப்தீன் அவர்கள்.
22. குருணாகலை, வெவகெதரை இல. 8 ஐச் சேர்ந்த கீன்பண்டா ரத்நாயக்க அவர்கள்.
23. மாஸ்பொத்தை, சியம்பலங்கமுவை சங்கைக்குரிய திப்பட்டுபிட்டியே தம்மானந்த தேரோ அவர்கள்.
24. குருணாகலை, மெதலந்தவத்தை, அனகாரிக தர்மபால மாவத்தையைச் சேர்ந்த சீக்கு கேவாகே செமீ சில்வா அவர்கள்.
25. மாஸ்பொத்தை, ஆயுவந்தமையைச் சேர்ந்த வடுகுருணாஞ் சேலாகே செல்லப்பு அவர்கள்.

26. குடாகல்கமுவை, "வாசனு" ஐச் சேர்ந்த கோசுபண்டா ராமநாயக்க அவர்கள்.

27. குருணுகலே, பமுணுகெதர, மெதலந்தவத்தையைச் சேர்ந்த கெட்டி ஆச்சிகே நிரோதனந்த அவர்கள்.

28. குடாகல்கமுவை, கிடப்பொலேயைச் சேர்ந்த கோசுத் முதியஞ் சேலாகே வீரதுங்க அவர்கள்.

29. மாஸ்பொத்தை, உடபதலவை, கொக்கலவத்தையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ்சேலாகே குணரன்காமி ரத்நாயக்க அவர்கள்.

30. மாஸ்பொத்தை, ரத்கரவ்வையைச் சேர்ந்த அழகக்கோன் முதியஞ்சேலாகே தயானந்த அழகக்கோன் அவர்கள்.

(ஆ) குருணுகலே, வெவகெதரை வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏகநாயக்க முதியஞ்சேலாகே கிரிபண்டா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 10 ந் வ.

5–551—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**காலி மாவட்டத்தில் தல்பேபத்துக் காரியாதிகாரியின் பகுதியைத் திருத்தி அமைத்தல்**

1973 மே மாதம் 11 ஆம் தேதி முதல் காலி மாவட்டத்திலே தல்பே பத்துக் காரியாதிகாரியின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிக்கின்றேன்.

1. தல்பே பத்து வடக்கு
2. தல்பே பத்து தெற்கு

2. (அ) தல்பேபத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம சேவகர்களின் பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும் :—

| பிரிவு இல. | | பெயர் |
|---|---|---|
| 176 | .. | கொட்டாவ |
| 176எ | .. | நெவுங்கல்ல |
| 177 | .. | தெல்லம்புற |
| 178 | .. | கருகொட |
| 178எ | .. | நபதவ |
| 179 | .. | உடுமலகல |
| 179எ | .. | நாக்கியாதெனிய |
| 180 | .. | பொல்பாகொட |
| 180எ | .. | பொரணகொட |
| 181 | .. | வல்பல |
| 182 | .. | மாகெதற |
| 182எ | .. | உடுவெல்ல—எல்ல இகல |
| 183 | .. | தல்கம்பல |

(ஆ) தல்பேபத்து தெற்குக் காரியாதிகாரியின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமசேவகர்களின் பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும் :—

| பிரிவு இல. | | பெயர் |
|---|---|---|
| 132 | .. | தல்பே தெற்கு |
| 133 | .. | மெட்டதும்ப |
| 134 | .. | கலெஹெ |
| 134எ | .. | பணுகமுவ |
| 135 | .. | பதின்றெருவ |
| 136 | .. | உணவட்டுண கிழக்கு |
| 137 | .. | உணவட்டுண மேற்கு |
| 142 | .. | பிட்டிதுவ |
| 143 | .. | தொடம்பே |
| 144 | .. | வியனகொட |
| 144எ | .. | கொக்கல |
| 148 | .. | ஹீனட்டிகல தெற்கு |
| 148எ | .. | தல்பே கிழக்கு |
| 149 | .. | ஹருமல்கொட மேற்கு |
| 149எ | .. | ஹருமல்கொட கிழக்கு |
| 151 | .. | ஹப்பாவண |
| 152 | .. | பிலான |
| 153 | .. | தொறப்பே |
| 154 | .. | அங்குளுகஹ |
| 155 | .. | ஹியாரே வடக்கு |
| 155எ | .. | ஹியாரே தெற்கு |
| 156 | .. | அகங்கம கிழக்கு |
| 157 | .. | அகங்கம மத்தி |
| 159 | .. | நாகந்த |
| 160 | .. | பியதிகம கிழக்கு |
| 161 | .. | பியதிகம மேற்கு |
| 162 | .. | கத்தளுவ மேற்கு |
| 164 | .. | கத்தளுவ கிழக்கு |
| 164எ | .. | மீகஹகொட |
| 165 | .. | திக்கும்புற |
| 166 | .. | தித்தகல்ல |
| 167 | .. | கஹந்த |
| 169 | .. | கோதாகொட |
| 170 | .. | அந்துகொட |
| 171 | .. | மலல்கொடபிட்டிய |
| 172 | .. | இமதுவ |
| 173 | .. | பறகொட |
| 174 | .. | கோம்பல |
| 175 | .. | ஹவ்ப்பெ |
| 175எ | .. | மாவெல்ல |

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தல ஸ்தாபனப் பிரதேசங்கள் அவ்வப் பிரிவுக் காரியாதிகாரிகளின் பிரிவுகட்குட்படும் :—

(அ) தல்பே பத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதி—

(1) பொல்பாகொட கிராமசபை
(2) கொட்டாவ கிராமசபை

(ஆ) தல்பே பத்து தெற்குக் காரியாதிகாரியின் பகுதி—

(1) அகங்கம பட்டினசபை
(2) ஹபருதுவ கிராமசபை
(3) கத்தளுவ கிராமசபை
(4) பிலான—மெட்டறம்ப கிராமசபை
(5) கஹந்த—நாகந்த கிராமசபை
(6) கோதாகொட கிராமசபை
(7) பறகொட கிராமசபை

4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமக்கோடுகள் அவ்வப் பிரிவுக் காரியாதிகாரிகளின் பிரிவுகட்குட்படும் :—

(அ) தல்பேபத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதி—
கொட்டாவ கிராமக்கோடு

(ஆ) தல்பே பத்து தெற்குக் காரியாதிகாரியின் பகுதி—

(1) இமதுவ கிராமக்கோடு
(2) கொக்கல கிராமக்கோடு

5. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் தொகுதிகள் அவ்வப் பிரிவுக் காரியாதிகாரிகளின் பிரிவுகட்குட்படும் :—

(அ) தல்பே பத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதி—
இல. 59—பத்தேகம வாக்காளர் தொகுதி (ஒரு பகுதி)

(ஆ) தல்பே பத்து தெற்குக் காரியாதிகாரியின் பகுதி—
இல. 61—அக்மீமன வாக்காளர் தொகுதி (ஒரு பகுதி)
இல. 63—ஹபருதுவ வாக்காளர் தொகுதி

6. இக்காரியாதிகாரிகளின் அலுவலகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அமைந்திருக்கும் :—

(அ) தல்பே பத்து வடக்குக் காரியாதிகாரியின் பகுதி—
யக்கலமுல்ல

(ஆ) தல்பே பத்து தெற்குக் காரியாதிகாரியின் பகுதி—
உணவட்டுண

பி. சிரிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
பதில் செயலாளர்.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மே மீ 7 ந் வ.

5–413—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

### பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்

(318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஆலோசனைச் சபைக்கு வழக்குரைஞர் கித்சிறி பண்டார யாப்ப செனெவிரத்ன அவர்களை இதிற் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு ஓர் உறுப்பினராக இருப்பதற்கென மாண்புமிகு நீதி அமைச்சர், மேற்படி கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் மகிழ்வுடன் நியமித்துள்ளாரென பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிஹால் ஜயவிக்ரம,
நீதி அமைச்சின் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973, மே 10 ஆம் நாள்.

5–529—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

எல்.டி.பி. 83/37.

### தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின்கீழ் கப்பற்றொழில் உல்லாசப்பிரயாண அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீ. பி. ஜி. கலுகலே,
கப்பற்றொழில், உல்லாசப்பிரயாண
அமைச்சர்.

கொழும்பு,
26 ஏப்பிறில், 1973.


#### கட்டளை

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இதற்கான அட்டவணையில் குறிப்பிடப் பட்ட காணிப்பிரதேசம் காப்பிடமாக இத்தால் வெளிப்படுத்தப்படு கின்றது.

#### அட்டவணை

பருத்தித்தீவுக் காப்பிடம்

அனலைதீவுக்கும், எழுவைதீவுக்கும் இடையில் யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், பருத்தித்தீவாக அமைகின்றதும், $\frac{3}{8}$ சதுர மைல் பரப்பைக் கொண்டதும், சுற்றிவரக் கடலை எல்லையாக வுடையதுமான காணிப்பிரதேசம் அடங்கலும்.




5–348—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ம் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுக் காலம்வரை மெத்தைத் தும்பு சிலிர்த் தும்பு ஏற்றுமதித் தொழிலுக்கான கூலி நிருணய சபையில் உறுப்பினராயிருப்பதற்கு (சட்டவாக்கக்கங்ளின் 136 ம் அத்தியாயமான) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவுக்கமையத் தொழில் அமைச்சரவர்கள் பின் வருவோரை மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென 1971 ம் ஆண்டின் கூலி நிருணய சபை ஒழுங்கு விதிகளில் 30 ம் ஒழுங்குவிதிகளுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை
செயலாளர்.
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 07 ந் உ.

**நியமன உறுப்பினர்**

1. பேராசிரியர் ஏ. டீ. வீ. த எஸ். இந்திரரத்தின
2. திரு. டபிள்யு. என். நந்திசேன
3. திரு. எம். என். ஜயந்தா ஜயரத்தின

**தொழில் வழங்குவோர் பிரதிநிதிகள்**

1. திரு. ஜே. டபிள்யு. பீ. பெரேரா
2. திரு. எல். ஈ. ஜயவர்த்தன
3. திரு. திஸ்ஸ விஜேரத்தின
4. திரு. ஈ. எஸ். அப்பாத்துரை
5. திரு. ஈ. சான்சன்
6. திரு. ரீ. எம். துனுவில
7. திரு. ரீ. ஆர். றஸ்ரம்ஜீ
8. திரு. ஜீ. நோட்டன் ஈ. த சில்வா

**தொழிலாளர் பிரதிநிதிகள்**

1. திரு. எல். டபிள்யு. பண்டிதா
2. திரு. ஏ. ரி. பொடிசிங்கோ
3. திரு. எம். ஏ. ஹனிபா
4. திரு. டபிள்யு. எச். எம். திங்கிரி பண்டா
5. திரு. எச். சந்திரசேகரா
6. திரு. கே. டீ. மெண்டிஸ்
7. திரு. எம். ஏ. டீ. குணரத்தின
8. திரு. எஸ். சிறிவர்த்தன

5–477—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

**கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

குடிவகை, வின்னுரித் தொழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமான) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவுவாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக்கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக் கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைய, இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு மே மாதம் 28 ம் தேதி நண்பகல் 12 மணிவரையும் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ் வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றுடன், எழுத்துவாயிலாக அனுப்பப்படுதல் வேண்டும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தலைவர்,
குடிவகை, வின்னுரித் தொழிலுக்கான கூலி
நிருணய சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 10 ந வ.

**அட்டவணை**

குடிவகை, வின்னுரித் தொழிலுக்கான கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு மே மாதம் 24 ம் தேதி வெளிவந்த 9,560 ம் இலக்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டனவும், காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டனவுமாகிய தீர்மானங்கள், அவ் வட்டவணையின V ம் பாகத்தில் "அரசாங்க விடுமுறைகள்—(25 ம் பிரிவு)" என்னும் தலைப்பின்கீழ் 9 ம் பந்தியின் (அ) ம் உப-பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உப-பந்தியினை இடுவதன்மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :—

அரசாங்க விடுமுறைகள்—25 ம் பிரிவு

(அ) இப் பந்தியினதும் 10ஆம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவர் ஒவ்வொருவரும் தம்மிடம் தொழில் புரியும் தொழிலாளர் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 21 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கியையப் பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக வழங்குதல் வேண்டும் :—

1. தமிழ்த் தைப்பொங்கற் திருநாள்,
2. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்,
3. மீலா–துன்–நபி (நபிகள் நாயகம் ஸல் அவர்கள்) பிறந்த திருநாள்,
4. மே நாள் (மே மாதம் 1 ம் தேதி),
5. குடியரசுத் திருநாள் (மே மாதம் 22 ம் தேதி),
6. சிங்கள விசாக மாதத்தின் பூரணை நாள்,
7. பண்டாரநாயக நினைவு நாள் (செத்தெம்பர் மாதம் 26 ம் தேதி),
8. நத்தார் திருநாள்.

5–530—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

எல். டி. பி. 6/52.

**மரங்களைத் தறித்தற் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

(452 ஆம் அத்தியாயமான) மரங்களைத் தறித்தற் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கமத்தொழில், காணி அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை,

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவ,
கமத்தொழில், காணி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 07 ந வ.

கட்டளை

1962 ஆம் ஆண்டு ஒற்றோபர் 13 ஆம் தேதிய 13,348 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டு 1964 ஆம் ஆண்டு ஒற்றோபர் 3 ஆந் தேதிய 14,191 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் திருத்தப்பட்ட 1962 ஆம் ஆண்டின் மரங்களைத் தறித்தற் (கட்டுப்பாட்டுக்) கட்டளையானது, அதன் 2 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "அல்லது ஏதேனும் நிருவாக மாவட்டத்தின் அரசாங்க முகவரினால் அல்லது எவரேனும் பெரும்பாக அரசிறை அலுவலரினால்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அல்லது ஏதேனும் நிருவாக மாவட்டத்தின் அரசாங்க முகவரினால் அல்லது எவரேனும் பெரும்பாக உதவி அரசாங்க முகவரினால் அல்லது எவரேனும் பெரும்பாக அரசிறை அலுவலரினால்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

5–463—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**1950 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கொழும்பு கப்பற்றுறை (நிருவாக)ச் சட்டம்**

சிறினேத் மத்தும பண்டார தொலபிஹில்ல ஆகிய நான் கார்த்தியா புஞ்சிஹேவாகே புத்ததாச த சில்வா என்பவர் கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் பிரதி கப்பற்றுறை ஆணையாளர் (நிர்வாகம்) பதவி வகிக்கும் அதேசமயத்தில் 1950 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கொழும்பு கப்பற்றுறை (நிருவாகச்) சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவு சேர்வாக 15 (2) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய வழக்குகள் தொடர அனுமதி வழங்குவதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கிறேன்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மே மீ 9 ந வ.

5–553—18.05.73 ந திகதிய வர்த்தமானி இல. 60

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**இலங்கைப் புகைவண்டித் திணைக்களம்**

புகையிரதக் கடவை செப்பனிடுதல்

வடபகுதிப் புகையிரதப் பாதை 222 ம் மைல் 20 சங்கிலியில் புளை–கொடிகாமம் ஆகிய புகையிரத ஸ்தானங்களுக்கிடையில்—அமைந்துள்ள புகையிரதக் கடவை திருத்த வேலை காரணமாக 73.05.30 பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 73.05.31 அதிகாலை 3.00 மணி வரை வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

2. திருத்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம் வாகனங்கள் 222 ம் மைல் 24 சங்கிலியில் அமைந்துள்ள புலோப்பளை வீதி வழியாகச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜே. போல் சேனரத்தின,
புகையிரதப் பகுதி தலைமை அதிகாரிக்காக.

5–554—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**அறிவித்தல்**

காட்டுத் திணைக்களத்திற்குச் சொந்தமான "C 201" என்ற முத்திரையைக் கொண்ட முத்திரை பொறிக்கும் சுத்தியல், வடமத்திய பகுதியிலுள்ள மிகிந்தலை வன காவலரின் பாவனையிலிருந்து காணமற்போய் விட்டது. இது அரசாங்கத்தினதும் பொதுமக்களினதும் கவனத்திற்கு இத்தால் கொண்டுவரப்படுகிறது.

மேற் குறிப்பிட்ட முத்திரைகள் பொறிக்கப்பட்ட மரங்களைக் கொண்டு செல்வதும், வாங்குவதும் அல்லது வைத்திருப்பதும் காட்டுக் கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அத்தியாயம்) பிரகாரமும் குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டக்கோவைப் பிரகாரமும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று இத்தால் பொதுமக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

வீ. ஆர். நாணயக்கார,
காடு பேணலதிபருக்காக.

காட்டுத் திணைக்களம்,
த. பெ. இல. 509,
கொழும்பு 2.

5–483—18.05.73 ந திகதிய வர்த்தமானி இல. 60

**புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் உற்சவம்—1973**

புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் உற்சவம் 1973 ம் ஆண்டு வைகாசி மாதம் 28 ம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் நடைபெறும்.

1949.05.27 ம் திகதியும் 9,978 இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும், 1950.05.26 ம் திகதியும் 10,105 இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ்வுற்சவத்தில் தீவிரமாக அமுல் நடத்தப்படும்.

செ. சிவஞானம்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா.

கச்சேரி,
வவுனியா,
1973 ம் ஆண்டு வைகாசி மீ 4 ந் உ.

5–469—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**பொலன்னறுவை மாவட்டத்தின் மெத எகொடபத்து பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியில் கிராமசேவகப் பிரிவுகளைப் புனரமைத்தல்**

பொலன்னறுவை மாவட்டத்தின் மெத, எகொடபத்து பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் இல. 73ஈ லக்ஷஉயன கிராம சேவை யாளர் பிரிவு சம்பந்தப்பட்டவை—1971 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 5 ஆம் திகதி, இல. 14,970 கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 498 ஆம் பக்கத்தில் 2 ஆவது பந்தியை அகற்றிவிட்டு, கீழ்க் கூறப்படும் திருத்தியமைக்கப்பட்ட பந்தியைச் சேர்க்கவும்.

“ 2. இப்புதிய கிராம சேவகப் பிரிவின் மீது சட்ட அதிகாரம் செலுத்தும் நீதவான் கோடு, கிராமக் கோடு, பொலிஸ் நிலையம் என்பவற்றுடன் இப்பிரிவிற்குரிய பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுக்காரர் பிரிவு, உள்ளூர்ச்சபை, தேர்தல் மாவட்டம் ஆகியவற்றையும் பொதுமக்கள் தகவலுக்காகக் கீழே தரப்படுகின்றது.

| கிராம சேவகப் பிரிவு | நீதவான் கோடு | கிராமக் கோடு | பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுக் காரர் பிரிவு | உள்ளூர் சபை | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. இல. 73 ஏ கும்புக்கன் .. | பொலன்னறுவை .. | பொலன்னறுவை .. | மெதபத்து தெற்கு | மெதபத்து மத்திய கி. ச. | 119 பொலன்னறுவை |
| 2. இல. 73 பீ காலிங்க அல | ஷை .. | ஷை .. | மெதபத்து வடக்கு | மெதபத்து மத்திய கி. ச. | 119 பொலன்னறுவை |
| 3. இல. 73 ஈ லக்ஷஉயன.. | ஷை .. | ஷை .. | மெதபத்து வடக்கு, மெதப்பத்து தெற்கு (சேவாகம, வவே தன்ன மெதபத்து வடக்கு லக்ஷஉயன, மெதபத்து தெற்கு) | மெதபத்து மத்... | 119 பொலன்னறுவை |

அமரதாச குணவர்தன,
பொலன்னறுவை மாவட்ட அரசாங்க அதிபர்.

பொலன்னறுவைக் கச்சேரி,
1973 ம் ஆண்டு மே மீ 8 ந் உ.

5–511—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டா.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகர்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மே | 4.5.73 | வெள்ளி | 27.4.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி | 4.5.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி | 11.5.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி | 18.5.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| யூன் | 1.6.73 | வெள்ளி | 25.5.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 1.6.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 8.6.73 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 14.6.73 | வியாழன் | ந. ப. 12 00 |
| | 29.6.73 | வெள்ளி | 22.6.73 | வெள்ளி | ந. ப. 12 00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.